# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1277/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மோகன் | த-பெ | ராமன் |
| ஊர்: | : | சிலையாயூரணி | | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டீ கடை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.03.2026**

**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் சிலையாயூரணியில் வசித்து டீ கடை வைத்துள்ளேன். தேதி மாதம் வருடம் எதுவும் நினைவில்லை. சுமார் 5, 6 வருடம் முன்னர் ஒரு நாள் ESSAR பெட்ரோல் பங்க் அருகில் இரவு 8.30 மணியளவில் வந்து கொண்டிருந்த போது பெட்ரோல்பங்க் எதிரில் கூட்டமாக இருந்தது. சம்பவ சாலையில் ஏற்கனவே சென்று கொண்டிருந்த பெண்மணி ஒருவருக்கு சாலை விபத்து ஏற்பட்டு கிடந்தார். பின்னர் அவருடைய உறவினர்களுக்கு மேற்படி விபத்து குறித்து நான் தகவல் சொன்னேன். விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. மேற்படி நபருக்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 03.06.2019 அன்று இரவு 8.30 மணிக்கு காரைக்குடி 120 அடி சாலை பழைய இரும்பு கடை நடத்தி வந்த பரிமலம் என்பவர் உறவினர் தைனீஸ்மேரி என்பவர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் Yamaha இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், வந்து அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதில்அவருக்கு

தலையில் பின்புறம் இரத்த காயமும் வலது முழங்கையில் வீக்க காயமும், இடது கனுக்காலில் இரத்த காயமும், ஏற்பட்டதாகவும் மேற்படி தகவலை அவருடைய உறவினர்களுக்கு சொல்லி 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்ட விவரம் தெரிந்து கொண்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:28:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1277/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பரிமளம் | த-பெ | சூசை மாணிக்கம் |
| ஊர்: | : | கட்டனுர் | | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பழைய இரும்பு கடை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கட்டனுரில் வசித்து இரும்பு கடை வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில்லை 2019 வருடம் ஒரு நாள் மோகன் என்பவர் இரவு 8.00 மணியளவில் எனக்கு போன் செய்தார். அதில் என்னுடைய உறவினர் தைனிஸ் மேரி என்பவருக்கு என்னுடைய கடைக்கு அருகில் சாலை விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். அந்த சம்பவத்தை கேள்விப்பட்ட நான் சம்பவயிடத்திற்கு சென்று அவரை பார்க்க முயற்சித்த போது அவரை அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று விட்டார்கள். அங்கு சென்று நான் பார்த்தேன். பின்னர் அவரை மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்று விட்டார்கள். மீண்டும் அவரை காரைக்குடி மானகிரி அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பரிந்துரை செய்தார்கள். பின்னர் நான் அங்கு சென்று பார்த்த போது சிகிச்சை பலன் இன்றி அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். என்னுடைய உறவினர் தைனிஸ் மேரிக்கு விபத்தை ஏற்படுத்திய நபர் என்னுடைய கடைக்கு அருகில் இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை வைத்திருந்த நபர் என்று தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் வழக்கு சம்பம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:28:44 +0530